1973 மார்ச் 14]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்பொழுது எல்லா முனிசிபாலிட்டிகளிலும் இந்தத் தள்ளு வண்டிகள் இருக்கின்றன. மற்ற கிராமங்களில், அவர்கள் கொல்லைப்புறங்களில் போகிற பழக்கம் இருக்கிற காரணத்தால், கிராமங்களுக்கோ, மற்ற இடங்களுக்கோ கொடுப்பதற்கு இல்லை. தற்சமயம் பெரிய பெரிய முனிசிபாலிட்டிகளுக்குத்தான் இந்தத் தள்ளு வண்டிகளைக் கொடுத்துக் கொண்டு வருகிறோம்.

ஸ்டான்லி மருத்துவ மனை கட்டட பராமரிப்பு மானியம்

*333 வினு—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970-71, 1971-72-ம் ஆண்டுகளில் சென்னை ஸ்டான்லி மருத்துவ மனைக்காக ஒதுக்கப்பட்ட பராமரிப்பு தொகையும், கட்டட விஸ்தரிப்பு தொகையும், சென்னை கால்நடைக் கல்லூரியின் அபிவிருத்திக்காக செல விடப்பட்டதா ?

(இ) ஆம் எனில், காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.

ஆண்டிப்பட்டித் தொகுதியில் கண்மாய்கள்.

*334 வினு—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிப்பட்டி தொகுதியில் லட்சுமிபுரத்தில் கண்மாய் அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத்திட்டம் ஆய்வில் உள்ளது.

*335 வினு—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த தெப்பம் பட்டியில் ஓர் கண்மாய் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) இத்திட்டம் பரிசீலிக்கப்பட்டு தள்ளிவைக்கப்பட்டது.

மணல்மேட்டிற்கருகில் தரையடிப்பாலம்

*336 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—